21st July 1962]

SRI R. PONNAPPA NADAR : Sir, is there any proposal to extend the scheme further in that unit?

THE HON. SRI R. VENKATARAMAN : If there are more applicants for it either in Marthandam or in any other place in Kanyakumari district, the Government will consider the question very sympathetically.

SRI M. WILLIAM : Sir, in view of the fact that the area is a backward one, will the Government come forward to start some more units departmentally?

THE HON. SRI R. VENKATARAMAN : As mentioned earlier, the Department provides common service facilities and it is only where such common service facilities are required, the Departmental units will be started. This Marthandam rural industrial estate does not require any common service facilities like tool making or dye making or anyone of these services. That is why I said that there is no proposal to start a Government unit in that industrial colony.

குடும்பக் கட்டுப்பாடு

* *499 கேள்வி.—திரு. சா. கணேசன் (திரு. கே. சீமைச்சாமி அவர்கள் சார்பாக) : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1960-61-ல் தமிழகத்தில் குடும்பக்கட்டுப்பாடு முறையை மேற்கொண்ட (1) ஆண்கள், (2) பெண்கள் எத்தனை பேர்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Eight thousand, five hundred and ninety fathers and 2,820 mothers adopted the sterilization method of family-planning during the year 1960–61. No information is available as to the number of persons who adopted the natural and appliance methods.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்த முறைப்படி தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை பேர்கள் இந்த மாதிரி குடும்ப கட்டுப்பாடு சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது சென்னையில் 8,590 ஆண்களும்,2, 820 பெண்களும் இந்த சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்?

MR. SPEAKER : The hon. Member Sri K. Mookiah Thevar wants the total figure for the whole State from the beginning of the Scheme up to date.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : I want notice of a separate question.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரியான ஆபரேஷன் செய்து கொள்வதில் மனைவிகள் ஒப்புதல் இல்லாமல் கணவன்மார்கள் ஆபரேஷன் செய்து கொள்வதால் அவர்களிடையே ஒத்துழைப்பு இல்லாமல் அநேகம் இடங்களில்

[21st July 1962

சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. அதனால் மனைவிகளுடைய ஒப்புதல் வேண்டும் என்பதைக் கேட்க அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது கணவன்மார் களைப் பொறுத்தது சார்.

திரு சா. கணேசன் : இம்மாதிரி சத்திர சிகிச்சை செய்து கொள்ளுகிறவர்கள் இதனால் சொல்ப லாபம் கிடைக்கிறது என் பதற்காகச் செய்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஒரு இடத்தில் செய்து கொண்டு விட்டு வேறு இடத்தில் மறுபடியும் செய்து கொள்வதற்கு என்று வந்து லாபம் அடைய முயற்சி நடை பெறுவதாகத் தெரிய வருகிறது. இது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மாதிரி ஒரு முறை செய்து கொண்டவர்கள் மறு முறை செய்து கொள்ள முடியாது.

திரு ஆ. கு. சுப்பையா : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் பெண்கள் குறைவாக செய்து கொள்ளுகிறார்கள். அவர் களைச் சிலர் பயமுறுத்தி அவர்களிடையே பீதியை உண்டாக்கு கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த பீதியைப் போக்கு வதற்கு இந்த சர்க்கார் என்ன ஆலோசனை செய்து வருகிறது. அதைப் போக்க இப்பொழுது குடும்ப நலம் என்ற ஒரு பிலிம் தான் இருக்கிறது. அது இப்பொழுது தியேட்டர்களில் ஜனங் களுக்குக் காண்பிக்கப்பட்டு வருகிறது. அதில் குழந்தைகளை அதிக மாக பெற்று விட்டால் அதன் கஷ்டம் என்ன என்று காட்டுகிறார் கள். அதைப்போலவே பெண்களிடையே ஏற்பட்டுள்ள பீதியை போக்கவும் அதைப்பற்றி தெரிந்து கொள்ளவும் வேண்டிய நட வடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். கிராமங்களில் அது சம்பந்த மான பிலிம்கள் கூட காண்பிக்கப்பட்டு வருகின்றன.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, what are the facilities provided in the Primary Health Centres for having the sterilisation methods?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The same facilities that have been provided for in the Headquarters Hospitals have been given in the Primary Health Centres also.

வரவேற்பு தாசில்தார்கள்

* 500 **கேள்வி.—திரு புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பிரமுகர்களை வரவேற்பதற்காக மட்டும் தனிப்பட்ட தாசில் தார்களை அரசாங்கம் நியமித்திருப்பது உண்மையா ?